(6 pages) **Reg. No. : ......................**

**Code No. : 8430** **Sub. Code : HTLM 32**

M.A. (CBCS) DEGREE EXAMINATION,
NOVEMBER 2014.

Third Semester

Tamil

இலக்கணம் III — தொல்காப்பியம் பொருளதிகாரம் 1 – 5
(அகம், புறம், களவு, கற்பு, பொருளியல்)

(For those who joined in July 2012 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. தொல்காப்பிய நூற்பாக்களின் நுண்ணிய கருத்துக்களைப் 'பருந்தும் நிழலும் போல உண்மை பிறழாது' எவரும் எளிதில் கற்றுணருமாறு திறம்பட உரை வகுத்த உரையாசிரியர் யார்?

(அ) இளம்பூரணர் (ஆ) நச்சினார்க்கினியர்

(இ) சேனாவரையர் (ஈ) பேராசிரியர்.

2. 'தோழி மதியுடம்படுத்தல்' – எத்தனை வகைப்படும்?

(அ) ஐவகைப்படும் (ஆ) மூவகைப்படும்

(இ) இருவகைப்படும் (ஈ) நால்வகைப்படும்.

3. 'மேலோர் மூவர்க்கும் புணர்ந்த கரணம்' – மேலோர் யாவர்?

(அ) அந்தணர், அரசர், துறவியர்

(ஆ) வணிகர், வேளாளர், முனிவர்

(இ) அரசர், அந்தணர், வணிகர்

(ஈ) அரசர், அந்தணர், வேளாளர்.

4. பால்கெழு கிளவி நால்வர்க்கும் உரித்தே – நால்வர் யார்?

(அ) தலைவி, தலைவன், தோழி, நற்றாய்

(ஆ) தலைவி, தோழி, செவிலி, முக்கோல்பகைவர்

(இ) தலைவி, தோழி, கண்டோர், அயலவர்

(ஈ) தலைவி, தோழி, செவிலி, நற்றாய்

5. உழிஞை போர் எதன் காரணமாக நிகழும்?

(அ) மண் காரணமாக (ஆ) பகை காரணமாக

(இ) மதில் காரணமாக (ஈ) பசு காரணமாக

6. 'குழவி மருங்கினும் கிழவ தாகும்' – இந்நூற்பா எந்த சிற்றிலக்கியம் தோன்ற அடிப்படையாக அமைந்துள்ளது?

(அ) கலம்பகம் (ஆ) பிள்ளைத்தமிழ்

(இ) கோவை (ஈ) அந்தாதி



Nesamony Memorial Christian College, Marthandam

7. வினாவும் விடையும் கூறி உள்ளுறுத்து உரைப்பதை எவ்வாறு கூறுவர்?

(அ) அகலம் கூறல் (ஆ) பொழிப்புரை

(இ) கண்ணழித்தல் (ஈ) பொருளுரைத்தல்

8. ஓர் ஊரின் கண்ணும் ஒரு நாட்டின் கண்ணும் பிரியும் பிரிவு எது?

(அ) ஓதற் பிரிவு

(ஆ) ஒருவழித்தணத்தல்

(இ) பொருள்வயிற்பிரிவு

(ஈ) பரத்தையர் பிரிவு

9. வீரர் இருவருள் வலிமை உடையவர் யார் என்று அறியும் பொருட்டு எழும் போர்?

(அ) வஞ்சிப்போர் (ஆ) உழிஞைப்போர்

(இ) தும்பைப்போர் (ஈ) வாகைப்போர்.

10. மன்னனது இயல்பைச் சொல்லி வாழ்த்தும் துறை?

(அ) பரிசில் துறை

(ஆ) கடவுள் வாழ்த்து

(இ) செவியறிவுறூஉ

(ஈ) இயன்மொழி வாழ்த்து.



பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

11. (அ) பெருந்திணைக்குரிய இலக்கணம் யாது?

(அல்லது)

(ஆ) 'மதியுடம்பாடு' என்றால் என்ன? எத்தனை வகைப்படும்? விளக்குக.

12. (அ) 'அகம்புகல் மரபின் வாயிட்கட் குரியன' – யாவை?

(அல்லது)

(ஆ) 'மடனொடு நிற்றல் கடனென மொழிப' – விளக்குக.

13. (அ) 'காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல்' – இத்துறைகள் இடம்பெறும் புறத்திணையைக் கூறி விளக்குக.

(அல்லது)

(ஆ) 'பேராண்பக்கம், பெருஞ்சோற்றுநிலை, கொற்றவள்ளை, தழிஞ்சி' – இத்துறைகள் இடம்பெறும் திணையைக் கூறி விளக்குக.

14. (அ) அறத்தொடு நிற்பார்க்கு வினா நிகழும் இடங்களாக நம்பியாசிரியர் கூறுவன யாவை?

(அல்லது)

(ஆ) இரவுக்குறியின் வகைகளைக் கூறி விளக்குக.



Nesamony Memorial Christian College, Marthandam

15. (அ) 'மன்னுறுதொழில், தன்னுறுதொழில்' – விளக்குக.

(அல்லது)

(ஆ) 'கடவுள்மாட்டு மானிடப்பெண்கள் நயந்தபக்கம்' – இத்துறையை விளக்குக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

16. (அ) ஐந்திணைகளுக்கும் உரிய கருப்பொருள்களை இளம்பூரணர் உரைவழி எடுத்தியம்புக.

(அல்லது)

(ஆ) ஐயம்நீங்கித் துணிதற்குரிய கருவிகள் யாவை? விவரிக்க.

17. (அ) தலைவனுக்குரிய கிளவிகளைக் கற்பியல்வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) தலைவிக்குரிய மரபுகளைப் பொருளியல் வழி ஆராய்க.



18. (அ) காஞ்சித் திணையை விளக்கி அதன் துறைகள் அத்திணைக்குப் பொருந்துமாற்றை ஆராய்க.

(அல்லது)

(ஆ) பாடாண்திணை பற்றி தொல்காப்பியர் கூறும் கருத்துக்கள் யாவை?

19. (அ) தொல்காப்பிய அகத்திணை இயல்களை நம்பியகப்பொருள் ஒழிபியல் செய்திகளுடன் ஒப்பிடுக.

(அல்லது)

(ஆ) பாங்கற்கூட்டத்தின் வகையும் அதன் விரியும் நம்பியாசிரியர் வழி விளக்குக.

20. (அ) புறத்திணைகள் காலந்தோறும் வளர்ந்துள்ள விதத்தை ஐயனாரிதனார் வழி ஆய்க.

(அல்லது)

(ஆ) புறப்பொருள் வெண்பாமாலையில் கைக்கிளைப் படலம் தேவையா ஆய்க.

———————



*Nesamony Memorial Christian College, Marthandam*